# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018**

| தரம் - 9 | தமிழ்மொழியும் இலக்கியமும் I,II | நேரம்: 2.30மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ................................................................

## பகுதி – I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) அகத்தில் ஒளி துலங்கிட வேண்டும். இங்கு **அகம்** என்பது
   1. வீடு   2. உள்ளம்   3. உள்   4. மனை

2) "செய்ய கமலத் திருவை நிகரான் தையல்" என்பதில் **'திரு'** என்பது
   1. பணம்   2. காசு   3. இலக்குமி   4. சரஸ்வதி

3) "எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது" என்பதில் **எளிது** என்பதன் **எதிர்ப்பதம்**
   1. அரிது   2. சுலபம்   3. இலகு   4. அழகு

4) "அரசே நீங்கள் இப்படிக் கூறுவது தர்மமாகுமா?" என்பதில் **தர்மம்** என்பதன் **எதிர்ப்பதம்**
   1. நீதி   2. அறம்   3. நேர்மை   4. அதர்மம்

5) ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல பசு மேய்ப்பவன்
   1. பாகன்   2. வலவன்   3. ஆயன்   4. தேவன்

6) தென்னைக்கு ஓலை என்பது போல தாழைக்கு
   1. தாள்   2. இலை   3.ஓலை   4. மடல்

7) பனைக்கு நுங்கு போல பலாவிற்கு
   1. குரும்பை   2. மூசு   3. வடு   4. கச்சல்

8) பின்வருவனவற்றுள் அரைப்புள்ளி எனப்படுவது
   1. ,   2. ;   3. :   4. .

9) எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. வைரவிழா   2. அமுதவிழா   3. பொன்விழா   4. வெள்ளிவிழா

10) ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் தவிர்ந்த பிறரால் வழங்கப்படும் சிறப்புரை
   1. அணிந்துரை   2. பதவுரை   3. நூலுரை   4. முன்னுரை

11) ஒலி, கடல், துன்பம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. சரம்   2. பாடு   3. சாகரம்   4. கலி

12) "மணமகளின் பெற்றோரால் சீதனம் வழங்கப்பட்டது" இங்கு சீதனம் என்பது
   1. வரதட்சணை   2. சன்மானம்   3. நன்கொடை   4. மானியம்

13) கைவருதல் என்ற மரபுத்தொடரின் பொருள்
   1. கைகொடுத்தல்   2. கைவைத்தல்   3. தேர்ச்சிபெறல்   4. செய்துமுடித்தல்



kalvi.lk

14) பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமையாதது

1. அல்லும் பகலும் 2. பென்னம் பெரிய 3. அக்கம் பக்கம் 4. மேலும் கீழும்

15) குதிரை காற்றிலும் கடுகிச் சென்றது. இதில் வந்துள்ள அணி

1. உவமையணி 2. உருவக அணி 3. உயர்வுநவிற்சியணி 4. தற்குறிப்பேற்றஅணி

16) ''வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்'' என்பதை உணர்த்தும் பழமொழி

1. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
2. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
3. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
4. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு

17) ஆணழகன் என்பது

1. இயல்புபுணர்ச்சி 2. கெடுதல் விகாரம் 3. தோன்றல் விகாரம் 4. திரிதல் விகாரம்

18) பின்வருவனவற்றுள் தன்வினை அல்லாதது

1. நனைத்தான் 2. எடுத்தான் 3. உண்டான் 4. படித்தான்

19) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றாத வினை

1. போ 2. ஓடு 3. எடு 4. நில்

20) சின்னப்பையன் விரைவாக ஓடினான். இவ் வாக்கியத்தில் வந்துள்ள பெயரடை

1. சின்ன 2. பையன் 3. விரைவாக 4. ஓடினான்

21) மாணவர்களே, இங்கே வாருங்கள். இவ் வாக்கியத்தின் எழுவாய்

1. மாணவர்கள் 2. நீ 3. நீங்கள் 4. வாருங்கள்

22) ஒரு செய்தியைக் கூறும் வாக்கியம்

1. வினா வாக்கியம் 2. ஏவல் வாக்கியம் 3. செப்பு வாக்கியம் 4. விருப்பு வாக்கியம்

23) ''ஊரில் நின்று வந்த மாணவன்'' இதில் வந்துள்ள சொல்லுருபு

1. ஊரில் 2. நின்று 3. வந்த 4. அன்

24) ''அம்மா குழந்தையைக் கட்டியணைத்தாள்'' இதில் வினையடியாகக் காணப்படுவது

1. அணை 2. கட்டி 3. கட்டு 4. கட்டியணை

25) தம்பி விரைவாக ஓடி நடந்தான். இவ் வாக்கியத்தின் **செயப்படுபொருள்**

1. தம்பி 2. விரைவாக 3. ஓடி 4. எதுவும் இல்லை

**புள்ளிக் கோடிட்ட இடத்தினை நிரப்ப மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26) மரத்திலுள்ள பூக்கள் இனி ஒவ்வொன்றாய் ………..

1. வாடின 2. வாடியது 3. வாடுகின்றது 4. வாடும்

27) பெண்கள் சேர்ந்திருந்து………. எனச் சிரித்தனர்.

1. சலசல 2. கலகல 3. மளமள 4. பளபள

28) நீ மகிழ்ச்சியாக இருப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே…….. நான் எப்போதும் மகிழ்ச்சியை நம்பியிருப்பதில்லை

1. ஆகவே 2. எனவே 3. அதனால் 4. ஆனால்



kalvi.lk

29) எழுத்துப் பிழையற்ற வாக்கியமாக அமைவது

1. நாம் செய்நன்றியை மறக்கக் கூடாது.
2. நாம் செய்னன்றியை மறக்கக் கூடாது.
3. நாம் செய்ந்னன்றியை மறக்கக் கூடாது.
4. நாம் செய்ந்நன்றியை மறக்கக் கூடாது.

**பின்வரும் வாக்கியங்களைக் கருத்தமைவுள்ள பந்தியாக்குவதற்கான ஒழுங்குமுறை**

30. அ. வீதிகளில் சந்து பொந்துகளில் வீடுகளில் எங்கெங்கும் இருட்டு.

ஆ. இப்போது இருள் விலகத் தொடங்கியது.

இ) இருட்டு கவிந்தது, எங்கும் இருட்டு

ஈ) இருட்டைப் போக்குவதற்கு தற்காலிக ஏற்பாடுகளில் மக்கள் முனைந்தனர்.

1. இ, ஈ, ஆ, அ
2. அ, இ, ஆ, ஈ
3. ஈ, ஆ, இ, அ
4. இ, அ, ஈ, ஆ

**(30 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி – II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்றை எழுதுக.**

i) கைத்தொலைபேசி விளையாட்டுக்களும் மாணவரின் எதிர்கால வாழ்வும்.

ii) இயற்கை உணவுகளும் ஆரோக்கியமான வாழ்வும்.

iii) உம் மனதைக் கவர்ந்த மலைநாட்டுக் காட்சி.

iv) வாசிப்பின் முக்கியத்துவம்.

(15 புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

i) ''சூழல் சுத்தம் பேணி தொற்றுநோய்களிலிருந்து விடுபடுவோம்'' எனும் தொனிப்பொருளில் துண்டுப் பிரசுரம்

ii) உமது பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி, அதற்கான ஒரு செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

**(03) பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டுள்ளன எனக் கூறுக.**

i) ''இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை''

ii) ''உன்றன் அணிநடையும் வஞ்சி அனையார் மணி நடையும் விஞ்சியது காணப்பிடித்தது காண்''

iii) ''தம்பியே! போன கிழமையும் வந்தியளே! இங்கை ஆருக்காகிலும் சுகமில்லை கிகமில்லையே?''

iv) ''பெண் பழி பொல்லாதது அரசே!''

v) ''உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்''

(10 புள்ளிகள்)

**(04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

வான்குருவியின் கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் - யாம் பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.



kalvi.lk

i) எல்லோராலும் செய்ய இயலாதவை எனக் கூறப்பட்டுள்ளவை எவை?

ii) இப் பாடலின் மூலம் உணர்த்தப்படுவது எது?

iii) இப் பாடலில் கூறப்படும் உயிரினங்கள் எவையேனும் மூன்றைக் கூறுக.

iv) ''மனிதர்களை எதைச் செய்ய வேண்டாம்'' எனக் கூறப்படுகிறது''?

(10 புள்ளிகள்)

**(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i) சகுந்தலையின் தந்தையாகிய கண்ணுவமுனிவர் தனது ஞானதிருட்டியால் அறிந்து கொண்டது யாது?

ii) தோமஸ் அல்வா எடிசன் தனது தோல்விகள் எவ்வாறு வெற்றிக்குக் காரணமாகியது என்கிறார்?

iii) இலட்சியவாதி இலட்சியத்தைக் கைவிட்டு ரிக்ஷாவில் ஏறிப்பயணம் செய்ய ஆரம்பித்த சம்பவம் என்ன?

iv) 'காட்டு வழி' எனும் கவிதையில் காட்டுப் பாதையில் அச்சம் தரும் அம்சங்கள் எவை?

v) ''இனிய உளவாக இன்னாத கூறல்...'' எனும் குறள் கூறும் பிரதான விடயம் யாது?

(10 புள்ளிகள்)

**(06) பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

i. சிலுசிலு

ii. சீதளம்

iii. தினை

iv. தாலம்

v. நாணம்

(05 புள்ளிகள்)

**(07) சுருக்கமான விடை எழுதுக.**

i) 'சோழனது குதிரைப்படை' என்பது எத்தனையாம் வேற்றுமை? இது உணர்த்தும் பொருள் யாது?

ii) ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டமைந்த வாக்கியம் எவ்வாறு அழைக்கப்படும்?

iv) பின்வரும் வினைகளில் செயப்படுபொருள் குன்றிய வினைகள் எவை?

எடு, செல், உண், நட

v) பின்வருவனவற்றில் உயிர்முன் மெய் புணர்தலுக்கு உதாரணமாக அமையக்கூடியவை எவை?

வாழை + இலை, வாழை + பழம், வாழை + காய், தாய் + உள்ளம்

(10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் - 09

## விடைகள்

### பகுதி I

| | | |
|---|---|---|
| 1) 2 | 11) 4 | 21) 3 |
| 2) 3 | 12) 1 | 22) 3 |
| 3) 1 | 13) 3 | 23) 2 |
| 4) 4 | 14) 2 | 24) 4 |
| 5) 3 | 15) 3 | 25) 4 |
| 6) 4 | 16) 1 | 26) 1 |
| 7) 2 | 17) 1 | 27) 2 |
| 8) 2 | 18) 1 | 28) 4 |
| 9) 2 | 19) 3 | 29) 4 |
| 10) 1 | 20) 1 | 30) 4 |

(30 X 1= 30 புள்ளிகள்)

### பகுதி II

**(01)** பொருள் 8

நுட்பங்கள் 4

மொழிச்செம்மை 3

(15 புள்ளிகள்)

**(02)** அமைப்பு 02

பொருள் 06

மொழிநடை 02

(10 புள்ளிகள்)



kalvi.lk

(03)

1) ஜானகியம்மாவால்
   ரமணிக்கு
2) நளனால்
அன்னப்பறவைக்கு
3) சின்னட்டியால்
   இளைய இலட்சியவாதிக்கு
4) சார்ங்கர்வனால்
   துஷ்யந்தனுக்கு
5) மாமியாரால்
   மருமகனுக்கு

(04)

i) தூக்கணாங்குருவியின் கூடு, கறையான் புற்று, சிலந்தி வலை, தேனீயின் கூடு, என்பவற்றை அமைத்தல்

ii) ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் திறமையுண்டு. அவரவர் தனது திறமைக்கேற்ப செயற்படுவதை ஏனையவர் திறமையற்றவர்கள் என எண்ணக்கூடாது.

iii) சிலந்தி, கறையான், தேனீ

iv) யாம் பெரிதும் வல்லோம் என வலிமை சொல்ல வேண்டாம்.

(05)

i) துஷ்யந்த மகாராஜாவை மணம் முடித்த சம்பவம்
   ( பக்கம் - 122) – (பாடப்புத்தகத்தின் பின்வரும் பக்கங்களைப் பார்க்கவும்)

ii) 134 ஆம் பக்கம்

iii) 146 ஆம் பக்கம்

iv) 157 ஆம் பக்கம்

v) 60 ஆம் பக்கம்

(06)

i) பொருத்தமான வாக்கியங்கள்

(5 X 1 = 5 புள்ளிகள்)



kalvi.lk

**(07)**

i) ஆறாம் வேற்றுமை, பிறிதின் கிழமை

ii)

iii) தனி வாக்கியம்

iv) செல், நட

v) வாழை + பழம், வாழை + காய்

(5 X 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

கட்டண விபரங்கள்

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி அධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457